

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# மஹநீயர்களைப்போற்றுவோம்

## திருப்பதி ஸ்ரீ ரங்கராமாநுஜ ஜீயர் ஸ்வாமி (எ) ஸாது ராமாநுஜாசார்ய ஸ்வாமி

### ஸ்வாமியின் அவதாரம் மற்றும் குடும்பம்

***ஸ்ரீ வில்லிபுத்தூர் கிடாம்பியார்*** எனப்படுகிற மரபில் ***ஆத்ரேய கோத்ரத்தில்*** *1893* ஆம் ஆண்டு புரட்டாசித் திருவோணத்தில் ***ஸாதுராமானுஜாசார்ய ஸ்வாமி***, தம் தாய் தந்தையருக்கு இரண்டாவது குமாரராக அவதரித்தார். இந்த நன்னாளே ***திருவேங்கடமுடையானுடையவும்***, ஒன்றான ***திருவேங்கடராமாநுஜ ஜீயருடையவும்*** திருநக்ஷத்ரமாகும்.

சிறு வயதிலேயே தாயார் தகப்பனாரை இழந்ததால் மாதுலரின் அரவணைப்பிலே வளர்ந்தார். இவரது தமையனார் ***ஸ்ரீ தெய்வநாயகமையங்கார்***. இவர் தென்னிந்திய ரயில்வேயில் இஞ்ஜினீயராக இருந்தார். இவர் காலத்தில் தான் இவரது மேற்பார்வையில் திருச்சி ஜங்ஷனில் சுரங்கப்பாதை முதலியவை வடிவமைக்கப்பட்டு, நிர்மாணிக்கப்பெற்றன.

***சிறுபுலியூர் ஶ்ருத்தஸத்வம் தொட்டாசார்ய ஸ்வாமியின்*** திருவடி ஸம்பந்தம் வேண்டுமென்கிற ஒரே ஆசையினால் கர்க்க கோத்ரத்துக்கு ஸ்வீகாரம் வந்தார். இவர்களுக்கு ***ஸாது கூட்டத்தார்*** என்று வ்யவஹாரமானதால் ***ஸாது ராமாநுஜாசார்யர்*** என்றே அழைக்கப்பட்டார்.

### ஶாஸ்த்ரக்கல்வி



இவரது மாதுலர் ***மேலைவாத்யார் திருமலை ஐயங்கார்*** ஸ்வாமி, வேதபாரங்கதராய், தர்மஶாஸ்த்ர நிபுணராய், உபயவேதாந்தங்களிலும் நிஷ்ணாதராய், ஆஶுகவியாய், மநீஷிமாந்யராய் விளங்கினார். ஸ்ரீராமானுஜாசாரியார் ஸ்வாமி தமது மாதுலரிடத்தில் ஸாமாந்ய ஶாஸ்திரங்களையும், ஈடுமுப்பத்தாறாயிரப்படியையும் அதிகரித்தார். ஸ்ரீபெரும்பூதூர் ஸம்ஸ்க்ருத கலாசாலையில் சேர்ந்து தர்க்கம், வ்யாகரணம், மீமாம்ஸை, வேதாந்தம் ஆகிய நான்கு ஶாஸ்த்ரங்களையும் கற்றார்.

அக்காலத்தில் ஸ்ரீபெரும்பூதூரில் ப்ரஸித்தராக விளங்கிய ***ஆஸூரி ராமாநுஜாசார்யரிடம்*** ஸ்ரீபாஷ்யம் முதலியன அப்யஸித்தார்.

## ஸ்வாமியின் ஜ்ஞானவர்ஷம்

மதுரையில் சில காலம் தங்கி காலக்ஷேபம் ஸாதித்துவந்தார். ஸ்மார்த்தர்கள் பலரும் இவரது காலக்ஷேபங்களில் அந்வயித்ததுண்டு. **ஹரிஸமய திவாகரம்** பத்திரிகையில் பல கட்டுரைகளை எழுதி வெளியிட்டுள்ளார். அதில் முக்யமானது **ததிபாண்டன் வரலாறு**.

பின்னர் சென்னைவாஸிகளின் வேண்டுகோளுக்கிணங்க திருவல்லிக்கேணியில் பலகாலம் தங்கி **ஈடுகாலக்ஷேபம்** ஸாதித்து பூர்த்திபண்ணினார். ***V. பாஷ்யமையங்கார்*** மற்றும் பல மஹநீயர்கள் அக்காலக்ஷேபத்தில் அந்வயிக்கும் பேறுபெற்றனர்.

**வேளுக்குடி வரதாசார்யார்** தொடங்கி **சிறுபுலியூர் ஶுத்தஸத்வம் அண்ணன் ஸ்வாமி ஸஹோதரர்(கள்) ஸ்ரீவில்லிபுத்தூர் கண்ணன்** ஈறாக பலருக்கும் ஸ்ரீபாஷ்ய பகவத்விஷயாதி ஸம்ப்ரதாய க்ரந்த காலக்ஷேபம் ஸாதித்து ப்ரமாண ஸம்ரக்ஷணமும் பண்ணியுள்ளார்.



## ஸந்யாஸ ஸ்வீகாரம்

திருவேங்கடமுடையான் கைங்கர்யத்தில் பேரார்வம் கொண்டவராய், ஸ்வாமி ஆஶ்ரமஸ்வீகாரம் செய்து கொண்டு 1944ல் திருமலையில் சின்னஜீயர் ஸ்தாநத்தை ஏற்று **ஸ்ரீரங்கராமாநுஜ சின்ன ஜீயர் ஸ்வாமி** என்னும் பெயரில் விளங்கினார். அது கேட்ட ***V. பாஷ்யமையங்கார்*** ஸ்வாமி முதலானோர், **சிங்கத்தை குஹையில் அடைத்தாயிற்று** என்றனர். ஸ்வாமி, 16 வருடகாலம் சின்ன ஜீயராகவும், 1960 முதல் 1975 வரை பெரியஜீயராகவும் எழுந்தருளியிருந்தார்.

## திருமலையில் ஸம்ப்ரதாய ஸம்ரக்ஷணம்



திருவேங்கடமுடையானது கைங்கர்யங்களில் கணப்போதும் காலம் தாழ்த்தாது அந்வயித்து கைங்கர்யைகநிரதராய் விளங்கினார். ஒருமுறை அதிகாரிகள், ஸேவார்த்திகள் கூட்டம் அதிகமாக இருப்பதால், காலையில் திருப்பாவை சாற்றுமறை ஆனவுடன் மத்யாஹ்ந காலத்தளிகையையும் ஸமர்ப்பித்து தொடர்ந்து மாலைவரை இடையீடின்றி தர்ஶநத்துக்கு ஏற்பாடு பண்ணுவதாகத் தீர்மானித்து அதனை ஸ்வாமியிடம் தெரிவித்தார்கள். ஸ்வாமி யுக்தியுக்தமான தமது திருவாக்கினாலே, 'அந்தந்த காலங்களில் தான் தளிகை ஸமர்ப்பிக்க வேண்டும்' என்று அவர்களுக்கு உணர்த்தி, யதாக்ரமமாக அனைத்தையும் நடைபெறச்செய்தார்.

இவர் காலத்தில், மரபுகளைக்காப்பாற்றும் பொருட்டு, லண்டனில் உள்ள ப்ரீவீகவுன்சில் வரை சென்று நல்லதீர்ப்பு வாங்கினார். இன்று திருவேங்கடமுடையான் ஸந்நிதியில் திருப்பாவை சாற்றுமறை நடக்கிறதென்றால்

அது அந்த ப்ரீவீகவுன்சில் தீர்ப்பினாலேயேயாகும். இதே போன்று நீதிமன்றத்தில் பல வழக்குகள் தொடுத்து வெற்றிகண்டு ஸம்ப்ரதாயத்தை நிலைநாட்டினார்.



## கஜ வாஹநமும் ஶேஷவாஹநமும்

ஒரு ஸமயம் குருவாயூர் சென்ற திருமலை அதிகாரிகள் அங்கு நடைபெற்ற சீவலிப்புறப்பாட்டைக் கண்டு (தகடு வடிவில் உள்ள குருவாயூரப்பனை அர்ச்சகர் யானை மேலே வைத்துக்கொண்டு வலம் வருதல்) திருமலையிலும் ப்ரஹ்மோத்ஸவத்தில் கஜவாஹனமாக உயிருள்ள யானையின் மீது அர்ச்சகர் மலையப்பனை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு புறப்பாடு பண்ணதிட்டமிட்டார்கள்.

அதுகேட்ட ஸ்வாமி, நம்மிடத்தில் யானைகளா இல்லை; யானையின் மீதே கஜவாஹநப் புறப்பாடு பண்ணலாம். பெருமாளுக்கு ஶேஷவாஹநம் ப்ரதாநமாதலால் (ஶேஷவாஹநத்தையும்) இதேபோல் பண்ணலாமே. **அதாவது, உயிருள்ளதொரு பெரிய பாம்பைப்பிடித்து அதன்மீது அர்ச்சகர் பெருமாளை எழுந்தருளப்பண்ணி புறப்பாடு பண்ணலாமே** என்றார். அதுகேட்ட அனைவரும் கொல்லென்று சிரிக்க, அத்திட்டம் அப்போதே கைவிடப்பட்டது.

## நம் ஸ்வாமியும் ஶ்ருங்கேரி ஶங்கராசாரியாரும்

ஶ்ருங்கேரி ஶங்கராசாரியார், **ஸ்ரீவேங்கடேஶ அஷ்டோத்தர ஶதநாமங்கள்** பொறித்த தங்க நாணயங்களால், ஸ்ரீநிவாஸனுக்கு ஸ்வர்ணபுஷ்ப அர்ச்சனை பண்ணும் வகையில் ஆந்திர அரசு ஆணையிட்டிருந்தது. அதனைக்காண அமைச்சர்கள், அறநிலையத்துறை அதிகாரிகள், பெருஞ்செல்வந்தர்களான அவரது சிஷ்யர்கள் பலரும் வந்திருந்தார்கள். அர்ச்சகர்கள் அதனைத் தடுக்க நீதிமன்றம் செல்லத் தீர்மானித்து ஸ்வாமியிடம் ஒத்துழைப்புக் கோரி வந்தனர்.

புன்முறுவல் பூத்தவாறு கொதித்தெழுந்த அர்ச்சகர்களை ஸ்வாமி, ஶாந்தப்படுத்தினார். மறுநாள் ஶங்கராசார்யரிடம் தமது வாக்சாதுர்யத்தினால் 'ஶாஸ்த்ர மர்யாதைகளையும் திருமலை கோயிலின் பழக்கவழக்கங்களையும் மனத்தில்படும்படி ஸம்ஸ்க்ருதத்தில் எடுத்துச் சொன்னார்'

**தாங்கள் கொண்டு வந்துள்ள ஸ்வர்ணபுஷ்பங்களையெல்லாம் தங்கள் கரகமலங்களால் என்னிடம் கொடுப்பீர். நான் அவற்றை அர்ச்சகரிடம் கொடுப்பேன். அவர் அர்ச்சனைகளை பண்ணுவார்** என்றார். அவரும் "**ததை₂வாஸ்து**" என்று சொன்னார். க்ரமப்படி அர்ச்சகரே அர்ச்சனை பண்ணினார்.

## ஸ்வாமியின் வேதவாணீ

ஒரு சமயம் திருமலையில் வேதஸம்மேளனம் நடைபெற இருந்தது. அதை காஞ்சி பெரிய ஶங்கராச்சார்யர் முன்னின்று நடத்த ஏற்பாடாயிருந்தது. **ஸ்ரீ குண்டலம் ரங்காசார்ய ஸ்வாமியின்** ப்ரார்த்தனைக்கிணங்க ஜீயர் ஸ்வாமி அந்த ஸதஸ்ஸுக்கு எழுந்தருளி 40 நிமிடம் ஸம்ஸ்க்ருதத்தில் அத்யக்ஷபாஷணம் நிகழ்த்தினார். அறநிலையத்துறை அமைச்சர் ஸ்ரீசந்திரமௌலி, ஶங்கராச்சார்யர் முதலிய பலரும் புளகீக்ருதகாத்ரராய் சற்று தூரம் வந்து கைங்கர்யத்துக்குச் செல்லும் அவரை வழியனுப்பி வைத்தார்களாம்.

பின்னர் காஞ்சீபுரம் வந்த ஶங்கராச்சார்யர் **ஸ்ரீ உ. வே. ப்ர. ப. அண்ணங்கராசார்யரிடம்** ஸ்வாமியின் வைதுஷ்யத்தைப் பலவாறு புகழ்ந்து பேசினாராம்.



## ஸ்வாமியின் பிற கைங்கர்யங்களில் சில

- எம்பெருமானார் நியமனப்படி **திருநாராயணபுரத்தில் குடில்** கட்டியுள்ளார்.
- **திருநாராயணபுரத்தில் போனகம்** தடைப்பட்ட காலத்து ஓடோடிச் சென்று பெருஞ்செல்வம் திரட்டி போனகம் குறையற நடக்க ஏற்பாடு செய்தார்.
- ஸ்ரீவில்லிபுத்தூரில் ஸ்வாமி **பெரியாழ்வார் திருமேனிக்கு ரக்ஷணமாக ஸ்வர்ணத்திலே** அழகியதொரு கவசம் ஸமர்ப்பித்தார்.

## பரமபத ப்ராப்தி

காலக்ஷேபம் ஸாதிப்பதன் மூலம் **ப்ரமாண ஸம்ரக்ஷணமும்**, அவிச்சிந்ந கைங்கர்யரூபமான **ப்ரமேய ஸம்ரக்ஷணமும்** பண்ணிக்கொண்டு, 31 வருடகாலம் திருவேங்கடமுடையானுக்கு ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்து போந்த நம் ஸ்வாமி, **1975 சித்திரை மாதம் ஶுக்ல ஷஷ்டி** எம்பெருமானார் திருநக்ஷத்ரமாகிய **திருவாதிரையன்று**, பரமபதநாதனுக்கு கைங்கர்யம் பண்ணும் வகையில் திருநாடலங்கரித்தார்.



**நம் ஜீயர் ஸ்வாமியும் திருமலை சின்ன ஜீயர் ஸ்வாமியும்**

இன்றைக்குத் திருமலையில் நம் ஸம்ப்ரதாயம் இருக்கிறதென்றால் அதனைக் கட்டிக்காத்த பெருமை ஸ்வாமிக்கே உரியதாகும். அவரது அடிச்சுவட்டில் நின்று, பின்னிட்டவர்களும் ஸம்ப்ரதாய ஸம்ரக்ஷணம் பண்ணிக்கொண்டு, வையம் மன்னி வீற்றிருக்க திருவேங்கடமுடையான் அருள்வானாக.




*ஸ்ரீவில்லிபுத்தூர்*
***ஸ்ரீ.உ.வே. R.கண்ணன் ஸ்வாமி (ஸாதுகூட்டத்தார்)***
*(இந்தக் கட்டுரையைத் தொகுத்தளித்தவர்)*





*(வெளியீடு)*
***ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ தனுர்தாஸ ராமானுஜ ஜீயர் ஸ்வாமி***
*ஸ்ரீ காரப்பங்காடு வேங்கடாசார்யர் ஸ்வாமி அறக்கட்டளை (94/2013)*
*ப.எண் 22, பு.எண் 8, பந்தல வேணுகோபாலன் தெரு,*
*திருவல்லிக்கேணி, சென்னை-600005 - தொடர்பு: 9353064317*

**நன்றி:** ***'ஸ்ரீஶைலேஶ தயாபாத்ரம்'***, *ஸ்ரீவைஷ்ணவ மாத இதழ், 24/71, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி 620 017.*